# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 29 வியாழக்கிழமை (13 - 07 - 2000) VALAMPURI ஒலி: 206


★ இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய

# பிரிட்டிஷ் விசேட பிரதிநிதி நாளை கொழும்பு வருகிறார்

## அரசு எதிர்க்கட்சி, தமிழ்க்கட்சி பிரதிநிதிகளை சந்திப்பார்

(கொழும்பு விசேட நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக ஆராய்வதற்கு பிரிட்டிஷின் விசேட பிரதிநிதி ஒருவர் நாளை கொழும்பு வரவுள்ளார். நாளை வரும் வெளிநாடுகள் மற்றும் பிரித்தானிய காமன் வெல்த் நாடுகளின் அந்தரங்கச் செயலாளர் பீற்றர் வெஸ்ட்மைக்கோட் ஜனாதிபதி, எதிர்க்கட்சிகள், தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.**

அரசியல் அமைப்புச் சீர்திருத்த தீர்வுயோசனைகள் குறித்து அரசும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் இணக்கப்பாட்டுக்கு வந்த பின் மைக்கோட்டின் கொழும்பு விஜயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

நாளை கொழும்பு வரும் பிரிட்டிஷ் பிரதிநிதி பீற்றர் வெஸ்ட் மைக்கோட் இலங்கையில் தற்போது நிலவி வரும் அரசியல் சூழ்நிலை குறித்தும், குறிப்பாக வட பகுதியில் நிலவும் யுத்தநிலை தொடர்பான விடயங்கள் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் இந்து சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கல்லூரி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## ஜனாதிபதியின் விசேட செய்தியுடன் அமைச்சர்இருவர் பாக், ஈரான் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட தூதுவர்களாக பௌத்த சாசன கலாசார அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பாகிஸ்தானுக்கும், அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் ஈரானுக்கும் சென்றுள்ளனர்.

அமைச்சர்கள் இருவரும் அந்நாட்டின் ஆட்சியாளர்களையும் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்து இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் யுத்த சூழ்நிலைகள் தொடர்பாக விளக்கிக் கூறுவதுடன் அந்நாடுகள் அளித்துவரும் உதவிகளுக்கு நன்றியும் தெரிவிக்கவுள்ளனர்.

ஜனாதிபதியின் விசேடதூதுவர்களாக செல்லும் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப்பிடவும், அமைச்சர் அஷ்ரப் ஈரான் ஜனாதிபதி முகமட் ஹதாமியிடமும் ஜனாதிபதியின் விசேட செய்திகளைக் கையளிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## துப்பாக்கிச் சூட்டில் சார்ஜன்ட் காயம்

திருமலை விசேட புலனாய்வுப் பிரிவில் பணியாற்றும் சார்ஜன்ட் ஒருவர் பிஸ்ரல் குழுவினரால் சுடப்பட்டுக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

பண்டார என்பவரே திருமலை தபால் நிலையத்தடியில் வைத்து இனந்தெரியாத நபரின் சூட்டில் காயமடைந்து திருமலை வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (ச)

★ அரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதா

## ஆவணிமாத சுபமுகூர்த்த தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு?

[கொழும்பு]

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகை செய்யும் எனக் கருதப்படும் உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்த சட்ட மசோதாவை ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஜனாதிபதியுடன் தொடர்புடைய அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த மாதம் எத்திகதியில் பாராளுமன்றத்தில் உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்த சட்ட மசோதாவை சமர்ப்பிப்பது குறித்து ஆராய்வதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளை அழைத்துப் பேசி அவர்களின் கருத்துக்களை ஜனாதிபதி கேட்டறியவுள்ளார் எனவும் அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## உயிரிழந்த புலிகள் விபரம்

(வவுனியா)

பல்வேறு மோதல் சம்பவங்களின் போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர் அவர்

(6ஆம்பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை தனித்துப் போட்டி இடும்!

(கொழும்பு)

ஸ்ரீலங்க முஸ்லிம் காங்கிரஸ் பதினோராவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தனித்து நின்று போட்டியிடுவதெனத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம் எச் எம். அஸ்ரப் தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை வடக்குக் கிழக்கு மாகாணம், கண்டி, புத்தளம், கொழும்பு ஆகிய இடங்களிலேயே தனித்துப் போட்டியிடுவதெனத் தீர்மானித்துள்ளனர். (வ)

## அரசு-ஐ.தே.கட்சி

## ஜனாதிபதி சுகயீனம் பேச்சுக்களில் பங்குபற்றவில்லை!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக நேற்றைய தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுமாலை 6மணிக்கு ஆரம்பமான

(6ஆம்பக்கம் பார்க்க)

## இணங்கிய விடயங்களில் தமிழ்க் கட்சிகளுக்கு திருப்தியில்லை

(கொழும்பு)

அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையே இடம் பெற்ற பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் குறித்து நேற்று ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகளுடன் பொது ஜன ஐக்கிய முன்னணிப் பிரமுகர்கள் பேச்சு நடத்தினார்கள்.

இப் பேச்சுக்களின் போது அரசுக்கும் ஐ.தே. கட்சிக்கும் இடையே இணக்கம் காணப்பட்ட விடயங்களில் தமக்கு திருப்தியில்லை என்று ஈ.பி.டி,பி.யும், புளொட்டும் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போலி அடையாள அட்டை விவகாரம்

## வழக்குத்தொடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை

(யாழ்ப்பாணம்)

போலி அடையாள அட்டைகள் வைத்திருந்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஆறுபேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

மேற்படி வழக்கு விசாரணை நேற்று யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி பா. சுப்பிரமணியம் முன்னி

(6ஆம் பக்கம்பார்க்க)

## 11-வது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களான அ.அமிர்தலிங்கம், வெ.யோகேஸ்வரன் ஆகியோரின் 11-வது நினைவுதினம் இன்று இடம்பெறஉள்ளது.

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்சியின்பணிமனையில் காலை 9.00 மணிக்கு இடம்பெறும் நினைவு நிகழ்வுகள் யாழ். மாநகர சபை

(6 ஆம் பக்கம் பார்க்க)

★ கலைப்பீட

## வெளிமாவட்ட மாணவர் நன்மை கருதி வவுனியா வளாகத்தில் தனி அலகு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்திற்குத் தெரிவான வெளிமாவட்ட மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கற்பதற்கு வசதியாக அங்கு வியாபார பீடத்தின் கீழ் கலைப்பிரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர்களுக்கு கொலைப் பயமுறுத்தல்

அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி அ. வினாயகமூர்த்தி, செயலாளர் எஸ். குமரகுருபரன் ஆகிய இருவருக்கும் கொலைப்பயமுறுத்தல்விடுக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது

அக்கொலைப்பயமுறுத்தலில், கட்சியின் தலைவர் அ. வினாயகமூர்த்தி செயலாளர் எஸ். குமரகுருபரன் ஆகிய இருவரும் ஒருவாரகாலத்திற்குள் கட்சிப் பதவிகளில் இருந்து விலகாது விட்டால் சுடப்படுவீர்கள். என்று குறிப்பிடப்பட்டுள்ளது. [6ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்னஞ்சிறு விளம்பரம்


சீமெந்து கூரை ஓடுகள்

லண்டன் Parry நிறுவனத்தால் தரநிர்ணயம் செய்யப்பட்ட சீமெந்து கூரை ஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு. அத்துடன்பல அளவுப் பிரமாணங்களில் இயந்திரங்களால் தயாரிக்கப்படும் கொங்கிறீட் கற்களும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையில் நேரடியாக பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட சழிவுகளும் இலவச போக்கு வரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை.
பரராச சேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

(கி-294)


# மேலதிக அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்து மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவரின் மறியற்போர் முடிவுற்றது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்பாக நேற்றுக் காலை ஆரம்பித்த மறியல் போராட்டம் யாழ். மேலதிக அரசஅதிபர் து. வைத்திலிங்கம் வழங்கிய உறுதிமொழியை அடுத்து இடைநடுவில் கைவிடப்பட்டு மாணவர்கள் வகுப்புகளுக்கு சமுகம்கொடுத்தனர்.

நேற்றுக்காலை எட்டுமணியளவில் குறிப்பிட்ட பாடசாலை முன்பாக பெருமளவு மாணவர்கள் திரளத்தொடங்கியதை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

அவ்வேளை,

காலை பத்துமணியளவில் அப்பகுதிக்கு விரைந்த மேலதிக அரசஅதிபர், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் மானிப்பாய் இந்துமகளிர்கல்லூரி அதிபர், இவ்விருபாடசாலைகளினதும் மாணவப் பிரதிநிதிகள் அப்பகுதி கிராம சேவர்கள், பெற்றோர் பிரதிநிதிகள், பொலிஸ்அதிகாரி மற்றும் வலய ப்பணிப்பாளருடன் நடத்திய கலந்துரையாடலின்போது மேற்படி சம்பவத்திற்கு தான் வருத்தமடைவதாக தெரிவித்ததுடன் இடம்பெயர்ந்தவர்களுக்கு இரண்டுவாரங்களுக்குள் மாற்றுஒழுங்குகள் செய்துதருவதாக உறுதியழித்ததை அடுத்து மாணவர்கள் தமது வகுப்புக்களுக்கு காலை 10. 30 மணியளவில் சென்றனர்.

நேற்றைய மறியற்போராட்டத்தில் மாணவர்கள் 'கல்வி எமது பண்பாடே எமதுபாடசாலையை நாம் பயன்படுத்த அனுமதி' 'பாடசாலையை ஆககிரமிக்க இனி இடமளியோம்' ஆகிய சுலோகங்களும் மாணவர்களால் ஏந்தப்பட்டிருந்தன.

மானிப்பாய்இந்துக்கல்லூரி அதிபர்மற்றும் ஆசிரியர்களுக்கும் அப்பாடசாலையில் தங்கியிருந்தோருக்கும் இடையே நேற்றுமுன் தினம் இடம் பெற்ற கைகலப்பின் எதிரொலியாக மேற்படி மறியல் போராட்டம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (க-03)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆச்சிரமத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி விசேட சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்ச்சித் தொடரில் அறிமுகஉரையைதிரு.க.கந்தசாமி (பேரவை உறுப்பினர் கரணவாய்) நிகழ்த்துவார்; கந்தனவன் துணையிருந்தால்'' என்ற தலைப்பிலான சொற்பொழிவை கே.பி. ஆனந்தநடேசன் (இலங்கை வங்கி, பருத்தித்துறை) நிகழ்த்துவார். [நா]

## பெற்றோல் விநியோகம்

(கோப்பாய்).

கோப்பாய் மத்தி விவசாயிகள் சம்மேளனம் தனது பிரிவுக்குட்பட்ட அங்கத்தவர்களுக்கு தலா அரைலீற்றர் பெற்றோலைக் கட்டுப்பாட்டு விலையில் வழங்கியுள்ளது.

மேற்படி விநியோகம் கோப்பாய் பெற்றோல் நிலையத்தினூடாக வழங்கப்பட்டுள்ளது. (சு-79)

## சமய தீட்சை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையின் அனுசரணையுடன் அகாயக்குளம் விநாயகராலய இந்து மாமன்றம் சமய தீட்சை வழங்கும் நிகழ்வினை ஒழுங்கு செய்துள்ளது.

மேற்படி சமய தீட்சை அகாயக்குளம் விநாயகராலயத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 30 மணிக்கு தீட்சை குரு சிவ ஸ்ரீ. கை. திருஞானசம்பந்தக் குருக்களால் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் ''தீட்சையும் அதனுடைய தத்துவமும்'' என்ற தலைப்பிலும், ''ஆலய வழிபாடும் திருமுறைகளும்'' என்ற தலைப்பிலும் விசேட சொற்பொழிவுகள் இடம் பெறவுள்ளன. (உ)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 12- ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 135796 ஏ | 144168 ஏ |
| 144168 பி | |

சாவகச்சேரி

| | |
|---|---|
| 141639 ஏ | 141639 பி |
| 141639 சி | 141654 ஏ |
| 141678 ஏ | 141678 பி |
| 143486 ஏ | 143486 பி |
| 143560 ஏ | 143560 பி |
| 147457 ஏ | 147457 பி |
| 147467 ஏ | 147467 பி |
| 147469 ஏ | 147469 பி |
| 147471 ஏ | 147471 பி |
| 147471 சி | 147471 டி |
| 148742 ஏ | 148742 பி |
| 153071 ஏ | 153071 பி |

யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 145094 ஏ | |

கோப்பாய்

| | |
|---|---|
| 145187 ஏ | 145187 பி |
| 145187 சி | 145187 டி |
| 145187 ஈ | 145244 ஏ |
| 145244 பி | 145244 சி |
| 145259 ஏ | |

நல்லூர்

| | |
|---|---|
| 136843 ஏ | 144801 ஏ |
| 144801 பி | 144801 சி |
| 144801 டி | 144899 ஏ |
| 144900 ஏ | 145030 ஏ |

| | |
|---|---|
| 145051 ஏ | 145058 ஏ |
| 145253 ஏ | 145267 ஏ |
| 145267 பி | 145313 ஏ |
| 145314 ஏ | 145334 ஏ |
| 145538 ஏ | 145551 ஏ |
| 145567 ஏ | 145700 ஏ |
| 143980 ஏ | 144203 ஏ |
| 144203 பி | 144203 சி |
| 144203 டி | 144203 ஈ |
| 144203 எவ் | 152544 ஏ |
| 152544 பி | 152544 சி |
| 152544 டி | |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 143934 ஏ | 144068 ஏ |
| 144068 பி | 144165 ஏ |
| 144165 பி | 144165 சி |
| 144177 ஏ | 144177 பி |
| 148234 ஏ | 148257 ஏ |

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 143926 ஏ | 143926 பி |

உடுவில்

| | |
|---|---|
| 123111 ஏ | 145101 ஏ |
| 145101 பி | 145176 ஏ |
| 145176 பி | 145176 சி |
| 145176 டி | 145177 ஏ |
| 145177 பி | 145184 ஏ |
| 145184 பி | 145184 சி |
| 145184 டி | 145196 ஏ |
| 145196 பி | 145196 சி |
| 145251 ஏ | 145252 ஏ |
| 145281 ஏ | 145282 ஏ |
| 145282 பி | 145283 ஏ |
| 145283 பி | 145283 சி |
| 145292 ஏ | 145292 பி |
| 145293 ஏ | 145293 பி |
| 144083 ஏ | 144116 ஏ |
| 147075 ஏ | 147075 பி |
| 147075 சி | 147075 டி |

(சு)

## கல்வி டிப்ளோமா பரீட்சை வினாத்தாள்கள் எடுத்துவரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் பட்டபின் கல்வி டிப்ளோமா பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரும் யாழ் திறந்த வெளி பல்கலைக் கழக இணைப்பாளருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்படி வினாத்தாள்களை கொழும்பிலிருந்து எடுத்து வந்துள்ளார்.

இதனையடுத்து மேற்படி பரீட்சைகள் திட்டமிட்டபடி ஜூலை 15 முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## பாடசாலைக்கு நிதியுதவி

(மண்கும்பான்)

மண்கும்பான் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் கட்டட வேலைக்கென யு. என். எச். சி. ஆர் நிறுவனம் ஐந்துலட்ச ரூபாவினை வழங்கியுள்ளது. (உ-83)

## இடம் பெயர்ந்தோருக்கான பொருட்கள் விநியோகத்தில் குளறுபடி வலி. மேற்கு கிராம அலுவலர்கள் குமுறல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிலவிக்கொண்டிருக்கும் அசாதாரண சூழ் நிலைகளின் காரணமாக இடம் பெயர்ந்து வலிகாமம் மேற்கு பகுதியில் தங்கியுள்ள குடும்பங்களுக்காக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் உணவல்லாப் பண்டங்கள் விநியோகமானது திருப்தியான முறையில் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை என வலி. மேற்கு பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பான தமது கண்டனத்தை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இடம்பெயர்ந்தோருக்கான விஷேட கலந்துரையாடலிலும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது இடம் பெயர்ந்து வந்துள்ள வலிகாமத்தில் தங்கியுள்ள மக்களுக்கு கடந்த இரண்டு மாத காலமாக சிறுவர் பாதுகாப்பு நிதியமே முழுப் பொறுப்பையும் ஏற்று உணவல்லாப் பண்டங்களை விநியோகித்து வந்தது. எனினும் அது இல விசனத்துக்குரிய நிபந்தனைகளை முன்வைத்தே பொருட்களையும் விநியோகித்து வருகிறது.

குறிப்பாக மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட குடும்ப[illegible]டமை மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து வந்த மக்கள் தெரிவில் புறக்கணிப்பு அசாதாரண சூழ் நிலைகலிலும் கூட 'உ' அட்டைகளை கருத்திலெடுத்து அதைப் புறக்கணித்தமை பிரதேச செயலகம் தயாரித்த முன்னுரிமைப் பட்டியலை புறக்கணித்து தாமே பயனாளிகளை தெரிவு செய்தமை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு எவ்வித நிபந்தனையும் இல்லாது பொருட்கள் விநியோகித்தமை.

மேற்படி நிறுவனம் நிபந்தனைகளை கையாள்வதால் இடம்பெயர்ந்த மக்களை புறக்கணிக்கவும், ஏமாற்றமடையவும்செய்கின்றன. இந்நிலை கிராம உத்தியோகத்தருடன் ஒருவர் கைகலக்கும் நிலை வரை சென்றிருப்பதாகவும். அறியப்படுகிறது.

இதனால் இடம்பெயர்ந்தோருக்கான உணவல்லாப் பொருட்கள் விநியோகத்தில் சிறுவர்பாதுகாப்பு நிதியத்தின் கொள்கைகளைமாற்றுமாறும் இல்லையேல் பிறிதொரு நிறுவனம் ஒன்றை குறித்த சேவையில் அமர்த்துமாறும் கிராம உத்தியோகத்தர் சார்பில் கேட்க்கப்பட்டதற்கு. பதிலளித்து பேசிய நிறுவனப் பிரதிநிதி, சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பதிலை எதிர் வரும் கூட்டத்தில் தெரிவிப்பதாக கூறினார்.

## எறிகணை செயலிழக்க வைக்கப்பட்டது

(அச்சுவேலி)

சிறுப்பிட்டி மேற்குப் பகுதியில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட எறிகணை ஒன்று இராணுவத்தினரால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை இந்த எறிகணையினை கண்ட அப்பகுதி மக்கள் அருகிலுள்ள இராணுவத்தினரிடம் இது பற்றி தெரிவித்ததையடுத்து அப்பகுதிக்கு விரைந்த இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் இந்த எறிகணையினை செயலிழக்கச் செய்துள்ளனர். (உ-14)

## ஆசிரியர் இடமாற்ற அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மேலதிக கல்வித்திணைக்கள பணிப்பாளரினால் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல வலயப் பணிப்பாளர்களுக்கும் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான அறிவுறுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கே மேற்படி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சீனியின் விலை கூட்டி விற்பனை பாவனையாளர்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

ப. நோ. கூட்டுறவு சங்க கிளைகளில் சீனியின் விலை 38 ரூபாவாக விற்கப்பட்டு வருவதாக பாவனையாளர் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 32 ரூபாவாக விற்கப்பட்ட சீனி தற்போது திடீரென 6 ரூபா கூட்டி விற்கப்பட்டுவருவதாகவும் இது குறித்த உத்தியோக பூர்வ அறிவித்தல் எதுவும் விடுக்கப்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

பொருட்களின் விலைகளை கூட்டி விற்பதில் ஆர்வம் காட்டும் இளைமுகாமையாளர்கள் பொருட்கள் விலைகளை குறைக்கும் விடயத்தில் அசிரத்தை காட்டிவருவது குறித்து பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (க)

## பொது மக்களின் சிரமங்களைக் குறைக்க விரைவில் புதிய நடவடிக்கை சிவில் அலுவலக அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தூர இடங்களிலிருந்து யாழ். சிவில்அலுவலகத்திற்கு பயண அனுமதி தொடர்பாக வரும் பொதுமக்களின் சிரமங்களை குறைக்கும் வகையில் புதிய நடைமுறைகளை அமுல்படுத்துவது குறித்து பரிசீலித்து வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் பொதுமக்கள் தாம் தங்கியுள்ள பிரிகேட்களுடாக பயண அனுமதி பெற்று ரிக்கற்றுக்களை மாத்திரம் மேற்படி காரியாலயத்தில் வழங்கும் முறை குறித்து பரிசீலனை செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

ஊரடங்கு வேளைகளில் யாழ். சிவில் நிர்வாக பதிவாகஅலுவலகம் முன் பொது மக்கள் பலர் ஒன்று கூடுவதாகவும்இதனால் பெரும்அசௌ[illegible]வதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

சிலர் அருகில் உள்ள வீடுகளில் இரவுவேளைகளில் தங்கிவிட்டு அதிகாலை வேளைகளில் மேற்படி அலுவலகம் முன்பு திரள்வதாகவும் இது சம்பந்தமாக சிலர்பேரம்பேசி வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-03)

## தற்காலிக இணைவு

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்திருக்கும் 20 ஆசிரியர்கள் தற்காலிகமாக யாழ். கல்விவலயப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். வலய கல்விப்பணிப்பாளரின் சுற்றுநிருபத்துக்கு அமைவாக கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் இவர்கள் பாடசாலைகளில் கடமை[illegible]

# தென்மராட்சியின் யுத்த விளைவு

# 12வெதுப்பகங்கள் செயலிழப்பு

## 150 இற்கும் மேற்பட்டோர் தொழில் இன்றி தவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களைத் தொடர்ந்து அங்கு இயங்கிய 12 வெதுப்பகங்கள் செயலிழந்துள்ளன.

இவ்வெதுப்பகங்களில் இருந்த பாண், கேக், பிஸ்கட் உற்பத்திக்கான பெறுமதி மிக்க உற்பத்திப் பொருட்கள் மற்றும் லட்சக்கணக்கான பெறுமதியுள்ள விறகுகள் என்பன கைவிடப்பட்டுள்ளன.

மேலும் இவ்வெதுப்பகங்களில் நேரடியாகத் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந்த சுமார் 150 பேர் தமது தொழிலை இழந்த நிலையில் தற்போது இருப்பது குறிப்பிடத்தக்கது. (சு-77)

## நிறுவனங்களின் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அரசசார் பற்றநிறுவனங்களின் இணையத்தின் வாராந்த பொதுக்கூட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை இராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள நிலையப்பணிமனையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினை குறித்தும் ஆராயப்பட்டது. (க-3)

# முந்நூறு ரூபா அதிகரிப்பு ஒய்வூதியருக்கும் கிடைக்கும்

(கொழும்பு)

அரசாங்கம் அறிவித்துள்ள 300 ரூபா அதிகரிப்பு அடுத்த மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்படவுள்ளதாக ஒய்வூதியத்திணைக்களம் அறிவித்துள்ளது.

அதிகரித்த இவ் ஒய்வூதியக்கொடுப்பனவு ஆறாயிரம் ரூபாவுக்குக் குறைவான ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-க)

## மண்ணெண்ணெய் வழங்கல்

புன்னாலைக்கட்டுவன் மற்றும் அச்செழுப் பகுதி விவசாயிகளுக்கு விவசாய சம்மேளனத்தினால் கிழமைக்கு 4 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. (உ-4)

# வலிகாமத்தில் விவசாயிகள் பயிர்ச்செய்கையில் அசிரத்தை

# இடம்பெயர்வும் காரணமாம்

(இணுவில்)

வலிகாமம் பகுதி விவசாயிகள் பலர் பயிர்ச்செய்கையில் நாட்டம் குன்றி இருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பயிர்செய் நிலங்கள் பலவும் வெறுமையாய் காட்சியளிக்கின்றன.

மண்ணெண்ணெய் விலையேற்றம் மற்றும் இடப்பெயர்வுகாரணமாகவே மேற்படி நிலைப்பாடு தோன்றியுள்ளதாக தெரிய வருகிறது.

தற்போது சிறுதானியப் பயிர்களான குரக்கன், பயறு என்பன செய்கை பண்ணப்பட வேண்டிய காலம் வந்த போதும் கூட வழமையாக மேற்படி பயிர்ச் செய்கையில் விவசாயிகளின் நாட்டம்குறைவாகவே காணப்படுகிறது.

அத்துடன் கிழங்கு மற்றும் மரக்கறிவகைப் பயிர்ச்செய்கையும் மிகவும் குறைந்தளவிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்நிலை தொடர்ந்தால் எதிர் காலத்தில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன் அதிக விலை கொடுத்துப் பெறவேண்டிய சூழ்நிலையும் தோன்றலாம் என சுட்டிக் காட்டப்புட்டுள்ளது.

எனவே, இந்நிலைப்பாட்டினை தவிர்க்கும் வகையில் உற்பத்திக்குழுக்கள் மற்றும் விவசாய சம்மேளனங்கள் என்பன விவசாயிகளுக்கு போதிய ஊக்கம் வழங்குவதுடன்மண்ணெண்ணெய் போன்ற விவசாய உற்பத்திக்குத் தேவையானவற்றை தாராளமாக வழங்க வேண்டும் எனவும் பொதுமக்கள்தரப்பில்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ)

## விசாரணைசெய்ய கோரிக்கை

சுட்டுக் கொல்லப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் கொலைச் சந்தேக நபர்கள் மூவரையும் மீண்டும் விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கோரி மனுத்தாக்கல் செய்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பந்துலவிக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குமாரின் கொலை தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டுள்ள சமன், சுமித் மற்றும் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ரணசிங்க ஆகியோரையே விசாரணை செய்ய அனுமதி கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-வ)

# சாரதாம்பாள் கொலை குறித்து ஆராய விசேடகுழு யாழ் வரும்

(கொழும்பு)

புங்குடுதீவு அந்தணப் பெண் சாரதாம்பாளின் கொலை சம்பந்தமாக விசாரணை மேற்கொள்வதற்கு விசேட புலனாய்வுப் பிரிவினர் கொழும்பில் இருந்து எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயக் குருக்களின் மகளும் ஒரு பிள்ளையின் தாயாருமான சாரதாம்பாள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின் படுகொலை செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

சட்டவிரோதக் கைதுகள் மற்றும் தொல்லை தவிர்ப்புக்குழுவின் தலைவரான அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி தலைமையில் கூடி இது தொடர்பாக ஆராய்ந்த பின்பே எதிர்வரும் 17ம் திகதி சாரதாம்பாள் படுகொலை தொடர்பாக விசாரணை செய்வதற்கு விசேட புலனாய்வுப் பிரிவினர் யாழ்ப்பாணம்வரவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான எம். பிக்கள் எம்.எம். சுஹைர், ஆர். யோகராஜன் உட்பட முப்படைகளின் குழு இணைப்பாளர்கள், சட்டமா அதிபர் திணைக்கள இணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ)

## உடுபுடவை வழங்கல்

[மல்லாகம்]

கைதடி, நுணாவில் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது கரவெட்டி கிழக்கில் தங்கியுள்ள 26 குடும்பங்களிற்கு அரிக்கன்லாம்பும், உடுபுடவைகளும் தமிழர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசசார்பற்ற நிறுவனத்தினரால் உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மற்றும் சைவத்தமிழ் வித்தியாலயம் என்பவற்றில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தோரிற்கு சமைத்த உணவும், உடுபுடவைகளும் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. [சு-14]

## இன்றும் நாளையும் பரீட்சை

தென்மராட்சியைச் சேர்ந்த யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம் 13 மாணவர்களுக்கான சைவபரிபாலன சபையினர் நடத்தும் பரீட்சை இன்றும், நாளையும் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் காலை 9 மணிக்கு நடைபெறும். என அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். [க-77]

---

### ஊனமுற்றோருக்கென

# புதிய ரக வண்டி கண்டு பிடிப்பு

# யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக் கால்உற்பத்தியாளர்களால் ஊனமுற்றவரின் போக்குவரத்துக்காக புதிய ரக வண்டி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

''முச்சக்கரவண்டியையும், நாற்காலிவண்டி'' யையும் இணைத்து இவ் புதிய வண்டி தயாரிக்கப்பட்டுள்ளது. பாவனையாளர்கள் தேவைக்குஏற்றாற்போல் இவ் வண்டியை கழற்றிப் பூட்டி பயன்படுத்தலாம். இவ் வண்டி பரீட்சார்த்தமாக சிலபாவனையாளர்களின் பாவனைக்கு விடப்பட்டபோது இவ் வண்டியை இலகுவாக செலுத்த முடிவதாக கூறி உள்ளனர்.

மேற்படி வண்டியை தயாரிப்பதற்கு சுமார் 11ஆயிரம் ரூபாமட்டுமே செலவிடப்பட்டுள்ளதாக நிறுவன இயக்குநர் தெரிவித்தார்.

விரைவில் இதைமக்கள் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (க-12)

---

# பனை அபிவிருத்தி சபைக்கு விரைவில் சர்வதேச விருது

(கொழும்பு)

இலங்கையில் செயற்பட்டு வரும் பனை அபிவிருத்தி சபைக்கு சர்வ தேச விருது இடைக்கவுள்ளதாக மேற்படி சபையின் தலைவர் எம். பாக்கிய நாதன் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டின்மற்றிட் நகரை வியாபார விசாரணைகளை மேற்கொள்ளும் சர்வதேச தெரிவுக்குழுவே இவ்வாறு பரிந்துரை செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துளளார்.

இது தொடர்பாக மேலும் அறியப்படுவதாவது.

புத்தாயிரமாம் ஆண்டின் ஜூலை மாதம் 15ம் திகதி சனிக்கிழமை நியூஜோர்க் நகரில் அமைந்துள்ள மரியோட் மாக்குவிஸ் ஹொட்டலில் மரியோட் மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச சிறந்த உற்பத்திகளுக்கான மாநாட்டின் போது இப்பரிசளிப்பு இடம் பெறும்.

நுகர்வோரைதிருப்திப்படுத்தும் உயரிய உற்பத்திகளை வழங்கும் ஸ்தாபன அமைப்புகளுக்குஇப்பரிசுவருடா வருடம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் இப்பரிசு நிர்ணயிக்கும் போது ஸ்தாபங்களில் இடம் பெறும் பூர்வாங்க தொழிற்பாடுகளின் விசேட திறமை, கௌரவம் ஆகியன முக்கியமாக கவனிக்கப்படுகின்றது.

இப்பரிசானது நுகர்வோர் ஒரு ஸ்தாபனத்தின் சிறந்த உற்பத்திகளுக்கான பொறுப்புப்பற்றி உணர்வதற்கான காரணியாகவும் அமைகிறது வியாபார பூர்வாங்க போதனைகள் ஸ்தாபனம் ஒருகொம்பனியின் முழுமையான விசேட திறமையையும், கௌரவத்தையும் பேணக் கூடிய புதிய கண்டுபிடிப்புக்கள், சிறந்த தரக்கட்டுப்பாடு அடிப்படைக் கல்விப் போதனைகளுக்கு அமைவான பயிற்சி வழங்கல், அனுகூலமான வர்த்தக பலா பலன்கள், ஐ.எஸ். ஓ 9000 கட்டுப்பாட்டுக்கு அமைவான தரநிர்ணயம் என்பவற்றில் ஒன்று அல்லது பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டே சிபார்சு செய்கிறது.

இதன் மூலம் கிடைக்கும் பரிசைப் பெறும் ஸ்தாபனம் அதை தனது வர்த்தக விளம்பரமாகவும் அமைத்துக் கொள்ள முடியும்.

இத் தங்கப்பதக்கப் பரிசானது பனை அபிவிருத்திச்சபையின் அண்மைக்கால புதிய கண்டுபிடிப்புகளின் சாதனைகள். சர்வதேச மயப்படுத்தப்படுதலின் அறிகுறியாக அமைகின்றது என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் எம். பாக்கியநாதன், தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

---

### சமாதானக் கதவுகள்

# திறக்கப்பட்ட வேளையில்

# தேவையற்ற நிகழ்வு அவசியமற்றது

## சாவகச்சேரி பிரதேசசபைத்தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த சமாதானக் கதவுகள் திறக்கப்பட்ட இவ் வேளையில் வேண்டத்தகாத நிகழ்வுகள் நமது மண்ணில் நடைபெறுவது எமக்கு வேதனை ஏற்படுத்துவ தாக உள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிற்கு அனுப்பிவைத்துள்ள அவசர செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

200 சிறைக் கைதிகள் பருத்தித்துறைத் துறைமுகத்தில் பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அன்றியும் 300 கைதிகள் திருமலையில் காத்திருக்கின்றனர்.

முன்பு 1956ம் ஆண்டிலும் இதுபோன்ற கபட நாடகத்தால் மணலாறு என்ற தமிழர் பிரதேசம் வெலிஓயா வெனக் கபளீகரம் செய்யப்பட்டது.

இத்தகைய செயற்பாடுகள் இனப்பிரச்சினைக்கு மேலும் தூபமிடுவதாய் அமைந்து விடும். அணைகிற தீயை எரிவதற்கு நெய் வார்ப்பது போலாகும்.

தென்மராட்சி மக்கள், உயிர்களை, உடைமைகளை இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர். அன்றாட வாழ்வுக்கு ஆலாய்ப் பறக்கின்றனர். அவர்கள் மேலே குறிப்பிட்ட வேலைக்கு பயன்படுத்தப்பட்டால் காலமறிந்து செய்யும் பேருதவியாக அமையும்.

அன்றியும் கருத்து மோதல்களையும் தீர்க்கலாம். நிரந்தரமாக பெறவேண்டிய சமாதானம் பயனற்றதாய் போகக் கூடாது.

சகலரும் வேண்டுவது சமாதானமேயாகும். எனவே குறித்த செயற்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் தூதராக அமைச்சர் செக்குடியரசுக்கு விஜயம்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் விசேட தூதுவராக தபால் தொலைத்தொடர்புகள் தொடர்புசாதன அமைச்சர் மங்கள சமரவீர செக் குடியரசுக்கு சென்றுள்ளார்.

''செக்'' குடியரசுக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் மங்கள சமரவீர செக் குடியரசின் ஜனாதிபதி மெக்லர்காவெல்லையைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (வ)

## உலக தரிசனம்

# ஹிஸ்புல்லா குழுவிற்கு எதிராக துருக்கிய நீதிமன்றில் வழக்கு

(அங்காறா)

நாற்றிஜக்பதிற்கும் மேற்பட்டோரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு இஸ்லாமிய தீவிரவாதிகள் 15 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் துருக்கிய நீதிமன்று ஒன்றில் ஆரம்பமாகியுள்ளது,

துருக்கிய பொலிஸார் அண்மையில் மேற்கொண்ட தேடுதல்வேட்டையைஅடுத்து பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதும் 70 இற்கு மேற்பட்ட சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்தே மேற்படி வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தக் குழு அரசுக்கு எதிராக சதி செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹிஸ்புல்லா குழுவை சேர்ந்த 13 பேருக்கும் மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று சட்டத்தரணிகள் பலர் வாதிட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது: (க-து)

# இந்தியாவில் இருந்து சென்ற சட்டவிரோத குடியேற்றவாசிகள் கிரேக்க கடற்படையால் கைது

(புதுடில்லி)

இந்தியாவைச்சேர்ந்தசட்டவிரோத குடியேற்றவாசிகள் 34பேரை ஏற்றிவந்த சரக்குக் கப்பலை கிரேக்கப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சட்ட விரோதமாக வேறோர் நாட்டுக்குகொண்டு செல்லும் நோக்கில் அரேபியக் கடல் வழியாக வந்து கொண்டிருந்த சரக்குக் கப்பலை அரேபியக் கடற்படையினர் வழிமறித்தனர்.

அவர்களது கட்டளைக்கு கீழ்ப்படியாது, சரக்குக்கப்பல் பயணத்தைத்தொடர்ந்ததையடுத்து சந்தேகம் கொண்ட கிரேக்க கடற்படையினர் கப்பலைக் கைப்பற்றியுள்ளனர்:

சட்டத்திக்கு புறம்பான வகையில் குடியேற்றும் வகையில் இந்தியர்களை தான் அழைத்துச் சென்றதை கப்பல் கப்டன் ஒப்புக் கொண்டிருப்பதாக கிரேக்க வட்டாரங்கள் ஒப்புக் கொண்டுள்ளன.

இவர்களில் குழந்தைகள், வயது முதிர்ந்தோரும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் எந்த நாட்டை இலக்கு வைத்து இவர்கள் பயணம் அமைந்தது என்பது குறித்த விபரங்கள் எவையும் வெளிவரவில்லை. (உ)

# எரிபொருள் குழாயில் தீவிபத்து 250 பேர் உடல் கருகிப் பலி

## நைஜீரியாவில் சம்பவம்

(நைரோபி)

நைஜீரியாவின் தென்பகுதியில்நேற்று முன்தினம் இடம் பெற்ற தீ விபத்தொன்றில் 250 அப்பாவிப் பொதுமக்கள் உடல்கருகிப் பலியாகினர்:

எரிபொருள் விநியோகக் குழாயில் ஏற்பட்ட துளையில் இருந்து வெளியேறிய பெற்றோலை நிரப்பிக் கொண்டிருந்த பொழுது திடீரென ஏற்பட்ட தீயினாலே இவர்கள் அனைவரும் மரணமாகியிருப்பதாகதெரியவருகிறது:

எரிபொருள் விநியோகக் குழாயில் களவாகப் பெற்றோலை எடுத்து கறுப்புச் சந்தையில் கூடிய விலையில் விற்கும் மோசடிக் கும்பல் ஒன்று இவ்வாறு குழாயில் துளையிட்டு பெற்றோல் பெற்றிருந்ததாகவும், தெரிவிக்கப்படுகிறது.

இதன்பின் ஏழைமக்கள் பலர் அத்துளைகளூடாக ஏராளமான கலங்களில் பெற்றோலை நிரப்பியவேளையில் குழாய் திடீரென தீப்பற்றி பெருஞ்சுவாலை விட்டு எரிந்ததிலேயே மேற்படி 250 மக்களும் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்த பலர் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதுபோன்றதோர் சம்பவம் கடந்த ஒருவருடங்களுக்கு முன் இதே பகுதியில் இடம் பெற்றதில் ஆயிரக்கணக்கான மக்கள் உடல்கருகி மரணமானது குறிப்பிடத்தக்கது. (க-உ)

# சிங்கப்பூரில் கல்வி கற்க வெளிநாட்டு மாணவர்களுக்கு அனுமதி

[சிங்கப்பூர்]

சிங்கப்பூரின் தலை சிறந்த பாடசாலைகள் வெளி நாட்டு மாணவர்கள் கல்விகற்க வசதி செய்யப்படும் என்று அந்நாட்டு கல்வி அமைச்சர் தெரிவித்தார்:

அவர் மேலும் தெரிவிக்கையில் சிங்கப்பூரிலுள்ள உயர் பாடசலைகளில் கல்வி கற்க 20 வீத வெளிநாட்டு மாணவர்களைச் சேர்ப்பதற்கு வழி செய்வதாகவும் தெரிவித்தார்.

சில கல்லூரிகள் இந்தமுயற்சிக்கு உதவும் வகையில் வெளிநாட்டு மாணவர்களுக்கு இடங்கள் ஒதுக்கியுள்ளதாகவும் அறியப்படுகிறது. (க-து)

# சவூதி-ஈரான் நாடுகளிடையே பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகும்

(றியாட்)

சவூதிஅரேபியா விரைவில் ஈரானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்ஒன்றில் கைச்சாத்திடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் ஒப்பந்தம் பற்றிய விரிவான கலந்துரையாடல்களை நடாத்தி அதனை விரைவில் நடைமுறைக்கு கொண்டுவரும் வகையிலான பணியினை முன்னெடுக்குமுகமாக சவூதிஅரேபிய உள்துறை அமைச்சர் ஈரான் பயணமாகியுள்ளார்.

குற்றச்செயல்கள், பயங்கரவாதம், மற்றும் போதை வஸ்துகடத்தல் என்பவற்றை தடுத்தல் இவ் ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தேர்தலில் வாக்களிப்பு

# சிரிய முன்னாள் ஜனாதிபதியின் மகன் தேர்தலில் வெற்றி பெற்றார்

## இரத்தத்தாலும் வாக்களித்தனராம்

(இலண்டன்)

சிரிய நாட்டில் அண்மையில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியின் மகன் பஸீரத் அஷாத் 97.27 வீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இத்தேர்தலில் பஸீரத்தின் அதி தீவிர விசுவாசிகள் பலர் இரத்தத்தினால் முத்திரையிட்டு வாக்களித்துள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது,

மிக இளயவயதினரான இவர் வெற்றி பெற்றிருப்பது குறித்து பலரும் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர், (க-து)

# சமாதான உச்சிமாநாட்டிற்கு இஸ்ரேல் பிரதமர் செல்வதற்கு மக்கள் ஆதரவு

(ஜெருசலேம்)

அமெரிக்காவில் இடம்பெறவுள்ள சமாதன உச்சிமாநாடு தொடர்பாக இஸ்ரேலில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புக்கள் பிரதமர் எஹிட்பராக்கின் முடிவினை ஆதரிக்கும் வகையில் அமைந்துள்ளன.

கருத்துக் கணிப்பினின்றும் பலஸ்தீன ஜனாதிபதி யசிர் அரபாத்துடன் அமெரிக்கா சென்று சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட விருப்பம் கொண்டுள்ளமை வெளிப்படையாகியுள்ளது:

இதேவேளைஎந்தவிதமான அமைதி ஒப்பந்தங்களை மேற்கொள்ள முன்பும் அது தொடர்பான கருத்துக்கணிப்புக்கள் பெறப்படும் என எஹிட்பராக் உறுதிகூறியுள்ளார். (உ)

# சிங்கப்பூர்-இந்தோ இணைய உடன்பாடு ஊடகத்துறையில் பெரும் திருப்பம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரும் இந்தோனேசியாவும் இணைய ராடர் தொடர்பான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன:

இந்த இணைய இணைப்பு மூலம் இந்தோனேசியாவும் சிங்கப்பூரும் மென் பொருள் துறையிலும் இணைய தொடர்பிலும் மேலும் வளர்வதற்கு உறுதுணையாகஇருக்குமென்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜகார்த்தாவிலுள்ள இணைய நிலய நிபுணத்துவமும் சிங்கப்பூர் இணைய நிபுணத்துவமும் இணைவது பொருநன்மைபயக்குமென்றும் சிங்கப்பூர் இணைய நிலையம் வெளிநாடொன்றுடன் இணைவது இதுதான் முதல்தடவை என்றும் சிங்கப்பூர் இணைய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் (க-து)

# தடங்கலின் மத்தியில் நடந்தேறிய ஈரோடு தமிழர் ஆதரவு மாநாடு

## ஏற்பாட்டாளர் ராமதாஸ் தெரிவிப்பு

(சென்னை)

ஈரோடு தமிழர் ஆதரவு மாநாடு நடக்குமா நடக்காதா என்றுபல சந்தேகங்கள் எழுந்தன. பிரபல பத்திரிகைகள் இதற்கு எதிரான கருத்துக்களைமுன்வைத்தன. எம்மைக் கொச்சைப்படுத்தின. இவை எல்லாவற்றையும் மீறி எடுத்த பணியை குறைவேதுமின்றி நடத்தி முடித்திருக்கிறோம். இது எமது ஆன்ம ஆட் பலத்திற்கு நல்லதோர் சான்று:

அண்மையில் ஈரோடில் நடைபெற்றதமிழர் ஆதரவு மாநாட்டின் ஏற்பாட்டாளரும்பாட்டாளி மக்கள்கட்சித் தலைவருமான டாக்டர் ராமதாஸ் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது மாநாட்டிற்கு உள்துறை அமைச்சர் அத்வானி வருகை தரமாட்டார். மாறாக ஈரோட்டில் புலிகள் மேயும், மாநாட்டில் புலிகள் பேசும் என்றெல்லாம் விஷமத்தனமான கருத்துக்களை பத்திரிகைகள் மக்கள் மனதில் திணிக்க முற்பட்டன.

மாநாட்டு ஆதரவாளர்களான எம்மை புலிகள் என்று குற்றம் சாட்டினர். பிரபாகரனின் கைப்பாவைகள் என்று கொச்சைப்படுத்தினர். இவை எவையும் எம்மைப்பாதிக்கவில்லை.

நாம் தமிழரின் பிரதிநிதிகள். இன்னல்படும் ஈழத்தமிழரின் உரிமைகளுக்காய் குரல் கொடுப்பவர்கள் அவர்களது பிரச்சினைகளை உலகமெல்லாம் ஒலிக்கச்செய்பவர்கள்:

நாம் திட்டமிட்டபடி, அதற்கும் மேலாக தமிழர் எழுச்சி மாநாடு சிறப்பாக நடந்துமுடிந்திருப்பது அகிலத்திற்கு இதனைத்தான் சுட்டி நிற்கிறது:

தீண்டத்தகாத பெயர்களாய், கட்சிகளாய் இதுவரைகாலமும் ஒதுக்கிவைத்த எம்மைப் பற்றிய செய்திகளை பெயர்களை சிலகாலமாக தாராளமாகவே கையாள்கிறது இந்து பத்திரிகை.

ஈழத்தமிழருக்கு ஆதரவாக ஒலித்த எங்கள் முத்தமிழ் அறிஞரை, எட்டு கோடி தமிழரின் தலைவரை, தமிழக முதல்வரைப் பார்த்து ஏளனம் செய்தது இந்து பத்திரிகை,

எமக்கு என்றும் தமிழர்களின் அதுவும் ஈழத்தமிழரின் ஆதரவு உண்டு. எம் கொள்கைகள் எமது நலன்களுக்கானவையல்ல. மொத்த தமிழினத்தின் வாழ்வை, ஏற்றத்தை, உரிமையை பிரதி பலிப்பவை. இதுதான் இந்த ஈரோடுமாநாடு உலகத்திற்கெல்லாம் இயம்பி நிற்கிறது என்றார். (உ)

## செய்திப்பரல்

★ சீனாவில் கல்வி இணையமகாநாடு நடைபெறுகிறது இதில் 60ற்கு மேற்பட்ட நாடுகள் கலந்து கொள்கின்றன.

★ இந்தோனேசியாவில் மீண்டும் காட்டுத்தீ பரவுகிறது. இம்முறை சிங்கப்பூருக்கு புகைமூட்டம் வராதாம்.

★ மலேசியாவில் தடை செய்யப்பட்ட தீவிர மத இயக்கமான அல்வர்கம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

★ காஷ்மீர் விடயமாக பேச்சுக்கு வருமாறு பாருக் அப்துல்லாவை வாஜ்பாய் டில்லிக்கு அழைத்திருக்கிறார்:

★ கொலம்பிய மந்திரி சபை மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. (து)

# ராஜஸ்தானில் பெரும் கலவரம் 10 பேர் வரையில் பலி; பலர்காயம்

(புதுடில்லி)

வட-இந்திய மாநிலமான ராஜஸ்தானில் இந்து-முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் இடம் பெற்ற பெரும் கலவரம் ஒன்றில் 10 பேர் வரையில் உயிரிழந்தனர் பலர் காயமடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இந்து ஒருவர் கொல்லப்பட்டதையடுத்து மேற்படி கலவரங்கள் வெடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடங்களில்மேலும் கலவரங்கள் தொடர்வதற்குரிய வாய்ப்புக்கள்தென்படுவதாகவும் இதனால்பெருமளவுஇராணுவத்தினர் அங்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும்படைத் தரப்பு மேலும் தெரிவித்துள்ளது: (க-து)

வலியார்க்கு மாநேற்றல்
ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை
குறள்

# வலம்புரி

## நியாயமான சிந்தனை

சமாதானம் ஒன்றைப் பெற்றெடுக்க படும் பிரயத் தனங்கள் பல. காலம் மாற்றத்திற்கு மருந்து. நடைமுறைச்சாத்தியமான சிந்தனைகள் அரசியல் தலைமைப் பீடங்களுக்கு உதயமாவது ஆரோக்கியமானதே.

புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் என ஜனாதிபதி அறிவித்திருப்பது மனமாற்றத்தின் நேரிய திசையைக் காட்டுகிறது. நடைமுறைச் சாத்தியமானதும் கூட. முனைந்து நின்று உயிர்க் கொடை ஈய்ந்து மண்மீட்புப் போரில் சங்கமமான புலிகள்விரும்புவதும் அதுவே.

பேச்சுக்கள் வெறுமையாகாது பொருள்பொதிந்ததாக அமையவேண்டும். நீண்ட நெடுங்காலமாக வேண்டி நிற்பவை எவை-பிரச்சினை முற்றுப் பெறாது இருப்பதற்குக் காரணங்கள்யாவை என்பவற்றை ஆராய்ந்து உணர வேண்டும். உறுதியாகவும் இறுதியாகவும்அத்தடைக் கற்களை நீக்க சேயல்வடிவம் கொடுக்க வேண்டும். இழுத்தடிப்புக்கள்மேலும் நிகழக் கூடாது சொல்லும் செயலுமாய் அரசியல் உயிர்ப்படைய வேண்டும்.

சட்டிக்குள்ளே கறணமடித்த அரசியல் தலைமைகள் தமிழ்மக்களை-ஏன் சிங்கள மக்களையும் சந்தியில் விட்டிருக்கிறார்கள். காணி அதிகாரம், வடக்குக்கிழக்குஇணைந்த தாயகம்,சமஷ்டியரசுஎன்பன குறைபாடுகளை தீர்க்க நிலை நிறுத்த வேண்டியன என இடித்துரைத்திருக்கிறார்கள் தியாகம் புரிந்த அனைவரும் மண்ணின் பங்காளிகளே. உண்மையை மறைக்க முனைதல்மாபாதகச்செயல். உழைப்பாளி ஊதியம் பெற்றேயாக வேண்டும். மண்ணுக்காக பொன்னையல்ல- பொருளையல்ல உயிரைத்தியாகம் செய்தவர்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். இதனைச் சுயசிந்தனையுடைய எவரும் மறுக்க மாட்டார்கள். ''நான்'' சாகாத காரணத்தால் நாடு நாசமானது போதும். உண்மையை உணர இனியும் காலம் தாழ்த்தக்கூடாது.

நேற்று முளைத்த அரசியல் காளான்கள் இனவாதம்கக்கும் எரிமலை யாவதும், பொறுப்பற்ற கூற்றுக் களைக்கக்குவதும் சமாதானத்தை இருட்டடிப்புச் செய்து விடும். ஆனால் இலக்குத்தெரிந்த பார்த்தர்களை இனியும் ஏமாற்றமுடியாது. தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தீர்வுக்கான மூல மூர்த்திகளை மனந்திறந்து கூறியிருக்கிறார்கள்.

- அன்புடன் ஆசிரியர்

42 முன்பள்ளிகளையும்

# வலி.தெற்குபிரதேசசபைபொறுப்பேற்பு

# 40 இலட்சம் ரூபா ஒதுக்கீடாம்

(தென்மராட்சி

வலிகாமம்தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் இயங்கி வருகின்ற 42 முன்பள்ளிகளையும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை இம் மாதம் முதல் பொறுப்பேற்று நிர்வகித்து நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

இத்திட்டத்தினை அமுல் செய்யும் பொருட்டு வலிகாமம் தெற்கு பிரதேசசபை ஏலவே 40 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து சுன்னாகம் மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கில் வைப்பில் இட்டுள்ளது எனவும் மேலும் 20 லட்சம் ரூபா குறித்த திட்டத்திற்காக வைப்பில் இடப்பட்டு மொத்தம் 60 லட்சம் ரூபாவுக்கும் கிடைக்கக்கூடிய மாதாந்த வட்டியில் இருந்து 42 முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் சம்பளம் வழங்கப்படும் என பிரதேச சபையின் தலைவர் திரு.தி.மா. செல்வராசா தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் ஒரே தடவையில் அதிகளவு முன்பள்ளிகளை பொறுப்பேற்கும் பிரதேச சபையாக வலிகாமம் தெற்கு பிரதேச சபை விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இந்த பிரதேச சபையினால் பொறுப் பேற்கப்படவுள்ள முன்பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் தளபாடம், மற்றும் விளையாட்டு உபகரணங்களையும் சபை வழங்கும் எனவும் அறியப்படுகின்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட சகல முன்பள்ளிகளும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன எனவும், இம் மாதம் முதல் இம் முன்பள்ளிகள் யாவும் ஒரே நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

யாழ். குடாநாட்டில்சுமார் 585 முன்பள்ளிகள் பல்வேறு பொது அமைப்புகளாலும் நடாத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

## அதிக விளைச்சல்

[இணுவில்]

வலிகாமப் பகுதியில் செய்கை பண்ணப்பட்ட சோளப்பயிர் இம்முறை நல்ல விளைச்சலை அளித்துள்ளதாக தெரியவருகிறது.

[உ-49]

## முழுநிலா கருத்தரங்கு

[தென்மராட்சி]

யாழ். அரச செயலகத்தின் கலாசாரப்பேரவை நீண்ட இடைவெளியின் பின்னர் எதிர்வரும் 16ம் திகதி காலை 9-30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் முழுநிலாக் கருத்தரங்கையும், கலைநிகழ்ச்சியையும் நடாத்தவுள்ளது.

யாழ். கல்விக்கோட்ட அதிகாரியும் பிரபல எழுத்தாளருமாகிய செம்பியன் செல்வன் தலைமையில் இலக்கியக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கலாசார உத்தியோகத்தர் செல்வி. தாட்சாயினி மகேந்திரன் மேற்கொண்டு வருகின்றார்.

[க-77]

## தேர்தல் தொடர்பான முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

பதினோராவது பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்களை பொதுஜன ஐக்கியமுன்னணி அரசு முழு மூச்சில் மேற்கொண்டுவருகிறது.

இதற்கு முன்னோடியாக 15ம், 16ம் திகதிகளில் பொதுஜன ஐக்கிய முன்னணி மாவட்ட அமைப்பாளர்களை அலரிமாளிகைக்கு அழைத்து தேர்தல் சம்பந்தமாக அரசுக்கு இருக்கும் வாய்ப்புக்கள் பற்றி ஜனாதிபதி சந்திரிகா கலந்துரையாடவுள்ளதுடன்அரசின்வெற்றிக்கு அயராது உழைக்க வேண்டுமென்றும் அமைப்பாளர்களை கேட்டுக் கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சாயி அருளமுதம்

### - சத்யம் -



மனிதனாகப் பிறந்த நாம் காலத்தை வீணடிக்கலாகாது. சத்யமே இவ்வுலகம். சத்யமே இவ்வாழ்வு. சத்யமே ஆனந்தம். சத்யமே இறைவன். அனைத்தும் சத்தியமே. சத்தியத்தை ஏன் மறந்து, அசத்தியத்தின் வழியே சென்று வாழ்க்கையை வீணாக்க வேண்டும்?

மனிதனால் எதுசத்தியம், எது அசத்தியம் என்று நிர்ணயிக்க இயலவில்லை. சத்தியத்தை அசத்தியம்எனவும், அசத்தியத்தைசத்திய எனவும் கருதுகிறான். இதுவேமித்ய உலகம்; இதுவே மிருத்யஉலகம். இது மரணத்துக்கு ஒப்பானது.

நமக்கு சத்தியத்தின்மேல் நம்பிக்கையில்லை; பொய்மையைப் பின்தொடர்ந்து செல்கிறோம் சத்தியத்தின்மேல் நம்பிக்கைகொள்ளுங்கள் சத்தியம்; என்ற இறைவன் இவ்வனைத்தையும் படைத்தது; படைப்புஅனைத்தும் சத்தியத்திலே சங்கமமாகிறது. சத்தியம் இல்லாதஇடம் பிரபஞ்சத்தில் எங்கும்இல்லை; எங்கும் பரவியிருப்பது கலப்பற்ற சத்தியமேயாகும்;

- பாபா

# வாழ்வியலிலிருந்து முகிழ்க்கும் மனவெழுச்சியே

# சபா ஜெயராசாவின் "கலையும் ஓவியமும்"

புதிய நூற்றாண்டை எதிர்நோக்கும் சர்வ தேசிய இனங்கள் எல்லாம் தமது அடையாளங்களை நிலை நிறுத்த கலைகளையே பெரிதும் நம்பியிருக்கின்றன என யுனெஸ்கோ நிறுவனம் தனது அண்மைய வெளியீட்டில் தெரிவித்திருந்தது. இத் தேசிய இனங்களில் தமிழினமும் ஒன்றாகும். இதற்கமைய தமிழினமும் தனது தேசிய கலைத்துவ அடையாளங்களை நிலைநிறுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இம் முன் முயற்சிகளுக்குச் சிறந்த ஒரு உதாரணமாக கலாநிதி சபா ஜெயராசா அவர்களின் ''கலையும் ஓவியமும்'' என்ற நூல் விளங்குகின்றது.

உலகளாவிய ரீதியில் கலைகளினது தோற்றமும் அது பற்றிய ஆர்வமுமானது சூழலை மாற்றியமைக்கும் மனித முயற்சிகளின் வெளிப்பாடுகளாக இருந்தது எனத் தொடங்கி; கலைகளுக்குரிய பரிமாணங்கள், வரலாற்றுக்கு முந்திய குகை ஓவியங்கள், தொன்மையான எகிப்திய கலை மரபுகள், தொல் சீனக் கலை மரபு, இந்தியாவின் தொன்மையான கலை மரபு. என்றவாறு நூலில் பல்வேறு கலைத்திறனாய்வு ரீதியான சிந்தனை விளக்கங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

வாழ்வியலில் இருந்து எழும் நெருக்கீடுகளின் வழியாக முகிழ்தெழும் மன எழுச்சிகளுக்குக் கொடுக்கப்பட்ட வடிவங்களாகவே தொன்மையான இந்திய ஓவிய மரபு முகிழ்த்து எழுகின்றது, அதனது கலாசாரப் பெறுமானங்கள் உலகிற்கே வழி காட்டி நிற்கின்றன என்பதுடன் தமிழகத்து தொன்மை ஓவியங்கள் பற்றியும், ஓவியத் திறனாய்வு. கலையாக்கமும் கைவினையும், கலையாக்கக் கோட்பாடுகளின் சமூகப் புலம், கலை நடையியல், யாழ்ப்பாணத்துக் கலைமரபு வடபுலத்து மட்பாண்டச் சித்திரங்கள், இலங்கையின் ஓவியக்கலை, திறனாய்வுப் பிரச்சினைகள் ஓவியச்சுவை என்றவாறு நூல் விரிவடைந்து செல்வதனூடாக நூலாசிரியரின் ஆழமான - அகலமான கலையியல் பற்றிய மெய்ப் பெறுமானப் பெரும் புலம் வெளிப்படுகின்றது.

ஓவியச் சுவை;

காணாதவற்றைக் காணுதலும், தெரியாதவற்றைத் தெரியப்படுத்தலும், உணராதவற்றை உணர்தல் முதலானவை ஓவியத்தின் பண்புகளாகும், சிறந்த ஓவியம்; அழகையும், கலைவலிமையையும், உருவத்தையும், உள்ளடக்கத்தையும் ஒன்றிணைக்கின்றது. ஓவியம் ஒரு கற்புலக்கலையாக இருந்தாலும் ஏனைய புலன்களின் அதிர்வுகளையும், சுவைகளையும் அது கட்புலன் வீச்சுக்குள் கொண்டு வந்து விடுகின்றது. இரு தளங்களில் ஓவியங்கள் முப்பரிமாணங்களைக் காட்டுதல், காட்சியின் வழியாக ஒரு பொருளின் பாரத்தை உணர்தல், வடிவமைப்பின் வழியாக ஒரு பொருளின் நறுமணத்தைப் புலப்படுத்தல், தூரிகை அசைவுகளால் ஒலியின் பண்புகளை உணர்தல் [illegible] கள் ஓவியச் சுவையாகவும் பரிமாணங்களாகவுமுள்ளன;

நல்ல ஓவியங்கள் மனதில் ஆழ்ந்து பதிந்த சுவடுகளை ஏற்படுத்தி விடும். பார்த்த மாத்திரத்திலே தோன்றுவது உடன் பதிவு எனப்படும். உடன் பதிவு மீள் பதிவாகி நீண்டகால நினைவுத் திரளில் ஊடுருவிச் செல்லல் நல்ல ஓவியத்தின் விசையாக அமையும்.

மேலும் நூலில் யாழ்ப்பாணத்தில் மட்பாண்ட அலங்கார மரபுகள், அவற்றை உருவாக்கல், கலைத்துவம் பற்றியும், மண் ஊடகக் கலையாக்கங்களிலே சங்கானை, துன்னாலை, இருபாலை, கொடிகாமம், முதலான ஊர்கள் சிறப்புப் பெற்றுள்ளன; மட்பாண்ட அலங்காரங்களில் கொடியும் பூவும் சிறப்புப் பெற்றிருந்தன. யாழ்ப்பாணத்து மரபிலே குடும்பம் என்பது ''கொடி'' என்றும் அழைக்கப்பட்டது. குடும்பம் சிறப்படைய வாழ்த்துதல் மண் ஊடகக் கலையின் சிறப்பார்ந்த உள்ளடக்கமாயிற்று என நூலில் குறிப்பிடப்படுகிறது.

நூலாசிரியர்;

யாழ்ப்பாணத்து-ஈழத்தமிழர்களின் கல்வியியல், கலையியல், நவீன திறனாய்வியல், அறிவியல் தொடர்பான பல்வேறு வாண்மை விருத்தி வெளியீடுகளை இக்கட்டான சூழ்நிலைகளிலும் மிகவேகமாக வெளியிட்டு வருபவர். சமூக சேவையியல் நோக்குடைய இவரது அறிவியல் பார்வைப்புலம் மிக அகன்[illegible] அறுபதாவது அகவையிலும் ஆர்ப்பாட்டம் இல்லாது அமைதியாகச் சேவையாற்றும் பெருமனிதர்; தனக்குப் பின்னால் பெரிய மாணவ பரம்பரையையேவழிப்படுத்தி வருபவர். பல்கலைக்கழக நிபுணத்துவத்தை சமூகத்தினுள் செலுத்தி சமூக அபிவிருத்தியில் அக்கறையுடன் ஈடுபட்டு வரும் கலாநிதி சபா: ஜெயராசா அவர்களின் பணி ஓங்க வலம்புரி வாழ்த்துகின்றது.

**பா. தனபாலன்**

தமிழ் மொழியில் கலைத் திறனாய்வு விருத்தியின் வளர்ச்சி இன்று அவசியமாக வேண்டப்படுகின்றது; நவீன உலகில் ஓவியமும் வடிவமைப்புக் கலைகளும், அவற்றிற்குரிய திறனாய்வுக் கோட்பாடுகளும் பெரு வளர்ச்சியடைந்துள்ளன. இவ் வளர்ச்சியினூடாக ஒவ்வொரு இனக் குழுக்களும் தமது கலாசாரப் பெறுமானங்களை உணர்ந்து நிமிர் நிலை ஏற்றங்களைப் பெற்று வருகின்றன. ஈழத் தமிழினமும் இவ் ஏற்றங்களைப் பெற இந்நூல் வழி காட்டல்களை இயக்குகின்றது. உலக ஓவிய மரபுகள், தமிழர்களது ஓவிய வடிவமைப்பு மரபுகள், திறனாய்வு நுண் முறைகள், வடபுலத்து மட்பாண்டச் சித்திரங்கள் என்பவை பற்றிய நிறைந்த அறிவியல், தகவல்கள் அடங்கிய நூலக ''கலையும் ஓவியமும்'' என்ற நூல் வெளிவந்துள்ளது.

# அரசும்-புலிகளும்மோதலைதவிர்த்து பேச்சுக்கு முன்வர வேண்டும்!

## மடுமாதா ஆராதனையில் ஆயர் மல்கம்ரஞ்சித்

(மன்னார்)

அரசும்- விடுதலைப் புலிகளும் மோதல்களை தவிர்த்து இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முன்வர வேண்டும் என்று இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித் மடுமாதா ஆலயத்தில் இடம்பெற்ற ஆராதனையின் போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆயர் மல்கம் ரஞ்சித் அவ் வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருப்பதாவது: இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய காலம் இப்போது கனிந்து வருகிறது. இதனைப்பயன்படுத்தி இரு சாராரும் மோதல்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு நிரந்தர அரசியல் தீர்வுகாண வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் இரத்தினபுரியில் இருந்து 498 தமிழ் சிங்கள யாத்திரிகர்களுடன் இரத்தினபுரி ஆயர் ரஞ்சித் மல்கம் மடுமாதா ஆலயத்திற்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க யாத்திரை ஒன்றை மேற்கொண்டிருந்தமை தெரிந்ததே. (வ)

# இன்று தொடக்கம் 16ம் திகதி வரை வீரமக்கள் தினம் அனுஷ்டிப்பு

இன்று 13 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை தமிழீழ விடுதலைக் கழகத்தினரால் (புளொட்) வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இன்று தொடக்கம் தமிழர் பகுதிகளில் இரத்ததானம் மற்றும் சிரமதானப் பணிகள் இடம்பெறுவதுடன் தற்போதைய அசாதாரண நிலையில் உயிரிழந்த பொதுமக்கள் மற்றும் போராளிகளும் நினைவு கூரப்படுவார்கள் என்றும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைகூட்டணியின் மறைந்த பிரமுகர்களான அமரர்கள் அ. அமிர்தலிங்கம், வி. யோகேஸ்வரன், தமிழீழ விடுதலைக்கழக ஸ்தாபகர் க. உமாமகேஸ்வரன் ஆகியோர் நினைவாக மேற்படி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-03)

# விரைவில் யூலைமாத நிவாரணம்!

(யாழ்ப்பாணம்)

இம் மாதத்திற்கான நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்வதற்கென யாழ். செயலகபுனர்வாழ்வுப் பகுதியினர் அப்பொருட்களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருகின்றனர்.

அரிசி, சீனி, பருப்பு, பால்மா ஆகியனவே இம் மாத நிவாரணத்துக்கு புனர் வாழ்வுப் பகுதியினரால் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவுப் பொருட்களாகும்.

இதே வேளை இவ் உலர் உணவுப்பொருட்களை மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு அவ்வப்பகுதி பிரதேச செயலர்கள் உணவுப்பங்கீட்டு அட்டவணை மற்றும் நிவாரணம் பெறுபவர்களின் பட்டியல் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டவுடன் இந் நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்படுமென கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

# தபால் பொதிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்குடா நாட்டுக்கான 106 வெளியூர்த்தபால் பொதிகள் நேற்றைய செஞ்சிலுவைச் சங்க கப்பலில் எடுத்து வரப்பட்டதாகவும் அவை அனேகமாக இன்று தரம் பிரித்து விநியோகிக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியூர்களுக்கான 64 தபால் பொதிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-03)

# கும்பாபிஷேகம்

[கோப்பாய்]

கோப்பாய் மதி அண்ணமார் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு 14ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

முதல் நாள் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறுமென்றும் இதற்கான ஏற்பாடுகளை ஆலயத் தொண்டர்கள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க - 79]

# மாணவர்களின் பாதுகாப்பு குறித்து பெற்றோர்கள் கவலை தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய்இந்துக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தரப்பில் பெரும் அதிருப்தி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் நேற்று யாழ். மேலதிக அரச அதிபர் வழங்கிய உறுதிமொழியில் சற்று ஆறுதல் ஏற்பட்டாலும் கூட இடம்பெயர்ந்தோர் குறிப்பிட்ட பாடசாலையில் தங்கும் வரை பிரச்சினைகள் தொடரவே செய்யும் என்றும் தமது பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்து தாம் கவலைகொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். [க - 03]

# ★ பல்கலை மாணவர்களுக்கு விசேட பயணிகள் கப்பல் சேவை பயணச்சீட்டு இன்று வழங்கப்படும்

பருத்தித்துறையில் இருந்து திருமலைக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் சிற்றி ஒவ் றிங்கோ இம்முறை 250 பல்கலைக் கழக மாணவர்களை மட்டும் ஏற்றிச் செல்லவுள்ளதாக யாழ் சிவில் நிர்வாகக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இக் கப்பல் பயணத்திற்கான பயணச்சீட்டுக்கள் இன்று வழங்கப்படவுள்ளது. எனவே கப்பலில் பயணம் செய்யவுள்ள பல்கலைக்கழக மாணவர்களை பயணச் சீட்டுக்களைப் பெறுவதற்கு இன்று காலை 10 மணிக்கு யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (வ)

# யாழ். பல்கலைக்கு தெரிவான மாணவர் விபரம் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

1999 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்த துணைவேந்தர் இம்மாணவர்களின் விபரங்களை எடுத்துவந்துள்ளார்.

இவ்விபரங்களை யாழ். பல்கலைக்கழக பீடங்களின் அறிவித்தல் பலகைகளில் பார்வையிடலாம் என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

# படையினரின் வாகனம் வெடித்ததில் இளைஞர் காயம்

## யாழ். நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

படையினரின் 'டிராக்டர்' வாகனம் வெடித்ததில் காலில் பலத்த காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ். நகரிலுள்ள பிரபல கராஜ் ஒன்றுக்கு அண்மையில் திருத்துதல் வேலைக்கு கொண்டுவரப்பட்ட படையினரின் உழவு இயந்திரத்தின் இயந்திரப் பகுதி கோளாறினால் திடீர் என பாரிய சத்தத்துடன் வெடித்ததினால் அவ் இயந்திரத்தைபழுது பார்த்த நாகராஜா விஜயரட்ணம் (வயது 32) என்பவரே காயமடைந்தவராவர். (க-12)

# சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடி, இராசாவின் தோட்டம் ஆகிய பகுதிகள் நேற்று இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

காலை 8 மணியளவில் ஆரம்பமான சுற்றிவளைப்பு 10மணிவரையும் நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# செயலகத்தில் முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்கள் மற்றும் தலைவர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [க-3]

# பொதுக்கூட்டம்

இணுவில் கந்தசுவாமி கோயில்மகாசபையின்விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 16ஆம்திகதி காலை9மணிக்கு ஆலய உள்மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [சு-94]

### பிரிட்டிஷ்...

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுநடத்தவுள்ளார்.

நாளைக்காலை அரசாங்க, எதிர்க்கட்சி பிரதிநிதிகளுடனும், மாலைதமிழ்க் கட்சிகளுடனும் இவரது சந்திப்புநடைபெறவுள்ளது இதற்கான அழைப்பு தமிழ்க்கட்சிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சிலதினங்கள் கொழும்பில் தங்கியிருக்கும் பிரிட்டிஷ்பிரதிநிதி இனப்பிரச்சினை தொடர்பான சகல முக்கிய விடயங்களையும் விரிவாக ஆராயவுள்ளார் என கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

### வழக்குத்...

லயில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரின் அனுமதி பெறாது இவ்வழக்குத் தொடுக்க பொலிசாருக்கு அதிகாரம் இல்லையென்றும், அடையாள அட்டையைப் பரிசோதிக்கும் கருவியின் செயற்பாடு திருப்தி இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து மேற்படி நபர்களை விடுதலை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். (க-12)

### 11 -வது...

உறுப்பினர் செல்லன் சந்தையன் தலைமையில் நடைபெறவுள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

### அகில ...

இக்கொலைப் பயமுறுத்தல் தொடர்பாக நாரகென்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ)

### வெளிமாவட்ட...

வின் தனிஅலகொன்று ஆரம்பிக்கவுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளைதெரிவித்தார்

யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்துப் பிரச்சினை மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டே இம்மாற்று நடவடிக்கைஎடுக்கப்பட்ட தாகவும்அவர் மேலும் தெரிவித்தார்

யாழ் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ள மாணவர்களும், தற்போது கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களும் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம்கோரி பெருமளவில் மானிய ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்ததை அடுத்து மானிய ஆணைக்குழு இந்தத் தனிஅலகை நிறுவுமாறு வவுனியா வளாகத் தலைவருக்கும் துணைவேந்தருக்கும் அறிவித்துள்ளது.

இதேவேளை தற்போது யாழ்பல்கலைக்கழகத்தில் கற்கும் வெளிமாவட்ட பொதுக் கலைத்துறை மாணவர்களும் வவுனியா வளாகத்தில் கற்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் சிறப்புக் கலைகற்க விரும்பும் மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகத்திலேயே கற்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### உயிரிழந்த...

களின் விபரம் வருமாறு:-

★ நளினி
(திருநாமம் சசிமாலாதேவி)
ஆனையிறவு

★ கேசகெனடி
(விநாயகமூர்த்தி கிருஸ்ணராஜா) மட்டக்களப்பு

★ தவமாறன்
(தம்பையா சிவகோணேஸ்வரசூரியன்) வட்டக்கச்சி
எல்லைப்படையைச் சேர்ந்த

★ மதியாபரனம்/கினி
(வேலாயுதம் மதியாபரனம்)
புதுக்குடியிருப்பு (ச-7)

### இணங்கிய...

வித்தன.

முன்னர் தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுக்களின் போது அரசுடன் இணக்கம் காணப்பட்ட பல விடயங்கள் தற்போது மாற்றப்பட்டு அரசும் ஐ.தே.க.வும் இணக்கம் கண்டுள்ளன எனவும் இதற்கு ஐ. தே. கட்சியே காரணம் எனவும் தமிழ்க் கட்சிகள் தெரிவித்தன.

அரசுடனான தமிழ்க்கட்சியின் அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது ஐ. தே. கட்சியையும் அழைப்பதெனவும் நேற்றைய சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை வடக்குக் கிழக்கு மாகாணம் தமிழர் தாயகமெனவும், இணைப்புக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்ற கருத்துக்கு இடமே இல்லை என்றும் ஈ.பி.டி.பி. வலியுறுத்திக் கூறியுள்ளது. (வ-ச)

### ஜனாதிபதி...

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டத்திற்கும் ஜனாதிபதி சமுகம் கொடுத்தாரா? இல்லையா? என்பது இச்செய்தி எழுதும் வரை தெரியவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் கருணானந்தன் ரிதுஷன்

கருணானந்தன் அருள்வதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரிதுஷன் இன்று (13 - 07 - 2000) தனது 3வது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா. தாத்தா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார் அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மைத்துனர்மார், மச்சினிமார், மற்றும், உற்றார், உறவினர்கள் எல்லாம் வல்ல இறைவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

சிவகுருவீதி,
ஏழாலை மேற்கு.

குடும்பத்தினர்.
(இ- 645)

# உடன் தேவை

பத்திரிகைத்துறை, எழுத்துத் துறையில் அனுபவம் வாய்ந்த,

★ செய்தி ஆசிரியர்கள் (உதவி, இருபாலாரும்)

★ அலுவலக செய்தியாளர்கள்

உடன் தேவை

உரிய ஆவணங்களுடன் சனி, ஞாயிறு தினங்களில் ''வலம்புரி'' அலுவலகத்தில் நேரில் தொடர்புகொள்ளவும்.

—முகாமையாளர்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.